10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 219 வெள்ளிக்கிழமை டிசெம்பர் 29 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



## அகில இலங்கையில் துவாரகன் முதலிடம்!!

### இணையத்திலும், நூலகத்திலும் தேடிக் கற்றே சாதித்தேன்!

யாழ்ப்பாணம்,டிசெ.29

“ இணையத்திலும் , நூலகத்திலும் தேடிப் படித்தமையாலேயே என்னால் இந்தப் பெறுபேற்றைப் பெறமுடிந்தது. நான் ஒரேயொரு மேலதிக வகுப்புக்கு மாத்திரமே சென்றேன். இப்போது ஏனைய மாணவர்கள் ஏராளமான தனியார் வகுப்புக்களுக்குச் செல்வதால் மட்டும் உயர்ந்த பெறுபேற்றை அடையலாம் என நினைப்

06▶

## யாழ்.மாவட்டத்தில் முதல் மாணவர்கள்

கலைப்பிரிவு
**பாலசுப்பிரமணியம் தாட்சாயினி**



கொக்குவில் இந்துக் கல்லூரி

வர்த்தகப்பிரிவு
**விஜயகுமார் சாரங்கா**



கொக்குவில் இந்துக் கல்லூரி

உயிரியல் பிரிவு
**மு.வக்சலன்**



யாழ். இந்துக் கல்லூரி

## கமலேஸ்வரி மூன்றாமிடம்



யாழ்ப்பாணம், டிசெ.29

2017ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி கமலேஸ்வரி செந்தில்நாதன் உயிரியல் முறைமை தொழில்நுட்பப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த குறித்த மாணவி உயிரியல் முறைமை தொழிநுட்பப் பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று (இசற் புள்ளி- 3.1990) பெற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் நிலையையும் பெற்றுள்ளார்.(அ)

## வாக்குப் பெற என் பெயரா?

### முதலமைச்சர் காட்டம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 29

“வடக்கு கிழக்கில் இத்தேர்தல் காலத்தில் என் பெயரை இழுத்து கட்சிகளின் சார்பிலும் தனிப்பட்ட வேட்பாளர்கள் சார்பிலும் நன்மைகளைப் பெற பலர் எத்தனிக்கின்றார்கள் என்று தெரியவருகின்றது” என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் காட்டமாகத் தெரிவித்துள்ளார். கட்சியைப் பாராமல் மக்களை நேசிப்போருக்கே வாக்களியுங்கள் என முதலமைச்சர் தெரிவித்ததையடுத்து, ஒவ்வொரு

06▶

யாழ்.சிற்றங்காடிக்குள்

## பேயுமில்லை, பிசாசுமில்லை!

யாழ்ப்பாணம், டிசெ.29

“யாழ்ப்பாணம் நகர் சிற்றங்காடியில் பேய், பிசாசுகள் நடமாடித் திரிகின்றன எனக் கூறப்படுவது உண்மைக்கு மாறானது. எமது வியாபாரத்துக்கு எதிரானவர்களால் கட்டிவிடப்பட்ட கட்டுக்கதையே அது”

இவ்வாறு யாழ்.நகர சிற்றங்காடி வியாபாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்துக்கு அருகாமையில்

06▶

## மூன்றாமிடம் ஜெயராஜுக்கு!



யாழ்ப்பாணம், டிசெ.29

2017ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ஜெயராஜன் போல் ஜான்சென் 3ஏ சித்தியைப் பெற்று அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பிடித்தார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் சிறிதரன் துவாரகன் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றார். ஹம்பகா பண்டாரநாயக்க கல்லூரி மாணவன் பி.எச்.சோமரட்ண பௌதிக விஞ்ஞானப் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றார். (அ)

## கேப்பாபிலவில் 133 ஏக்கர் காணிகள் கையளிப்பு




முல்லைத்தீவு, டிசெ.29

முல்லைத்தீவு, கேப்பாபிலவில் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் இருந்த பொதுமக்களுக்குச் சொந்தமான 133 ஏக்கர் காணிகள் இன்று விடுவிக்கப்பட்டன.

வன்னி கட்டளைத் தளபதி தலைமையில் கேப்பாபிலவில் நேற்று

06▶

## வாளுடன் கொள்ளையன் வசமாகச் சிக்கினான்



யாழ்ப்பாணம், டிசெ.29

வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் வாளுடன் சிக்கினார்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் வட்டுக்கோட்டை கள்ளி வீதியில் கொள்ளையிட முயன்ற போதே அவர் வசமாக மாட்டியுள்ளார்.

வட்டுக்கோட்டை கள்ளி வீதியில் நள்ளிரவுவேளை வாள்களுடன் நடமாடிய

06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.



# அமைச்சரானார் பியசேன கமகே

கொழும்பு,டிசெ.29

சட்ட ஒழுங்குகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி ராஜாங்க அமைச்சராக பியசேன கமகே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை சத்தியபிரமாணம் செய்து கொண்டார்.

காலி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க, இரட்டைக் குடியுரிமை கொண்டவர் என்ற அடிப்படையில் பதவி நீக்கப்பட்டார். இதனை அடுத்து அவரது இடத்துக்குப் பியசேன கமகே நாடாளுமன்ற உறுப்பினராக உள்வாங்கப்பட்டார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினரான அவர், அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட நிலையில், அவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டது. எனினும் கீதாகுமாரசிங்க,மகிந்த அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மகிந்த அணியில் நிமால் லான்சா

கொழும்பு,டிசெ.29

உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் பதவியில் இருந்து அண்மையில் விலகிய நிமால் லான்சா, மகிந்த அணிக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாக நீர்கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் அறிவித்தார்.

அவர் தமது பதவி விலகல் தொடர்பில் ஜனாதிபதிக்கு வழங்கி இருந்த கடிதத்தில், நீண்டகாலமாக நீர்கொழும்புத் தொகுதிக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பதவியை எதிர்பார்த்திருந்ததாகவும், குறித்த பதவி கிடைக்காமையால் அதிருப்தியடைந்தாலும் சுதந்திரக் கட்சியை விட்டு விலகப் போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் தற்போது தாம் மகிந்த அணியினருக்கு ஆதரவளிக்க விரும்புவதாக அவர் அறிவித்துள்ளார். (அ)

## திருடர்களுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு,டிசெ.29

திருகோணமலை, மூதூர் பகுதியில் உள்ள கடையொன்றில் 8 இலட்சம் ரூபா பணத்தினைத் திருடிய இரண்டு சந்தேகநபர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவு பிறப்பித்தது.

மூதூர்ப் பகுதியில் உள்ள புடவைக்கடையொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, திருடப்பட்ட பணத்துடன், சந்தேகநபர்கள் இருவரையும் மூதூர் பொலிஸ் நிலையப் பரிசோதகர் ரத்னாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைது செய்திருந்தனர். இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய மூன்றாவது சந்தேகநபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## சுவரொட்டி ஒட்டிய நால்வர் கைதாகினர்

கொழும்பு,டிசெ.29

கண்டி - உடுதும்பர - கலுன்தென்ன பிரதேசத்தில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த உடுதும்பர பிரதேச சபையின் முன்னாள் தலைவர் செனரத் பண்டார உள்ளிட்ட நான்கு பேர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைதின் போது அவர்களிடமிருந்து 83 சுவரொட்டிகள் மற்றும் முன்னாள் தலைவரின் ஜீப் ரக வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு உடுதும்பர பிரதேச சபைக்குத் தெரிவான இவர், இந்த முறை ஸ்ரீலங்கா பொது ஜன முன்னிணியின் கீழ் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் சட்டங்களை மீறியதாகத் தெரிவித்து 34 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டதுடன் தேர்தல் சார்ந்த 42 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# யாழ்ப்பாணக் கல்லூரியில் 4 மாணவர்களுக்கு '3ஏ'



வசந்த்



பிரதீஸ்



அஸ்வின்



அனோஜா

யாழ்ப்பாணம், டிசெ.29

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் 4 பேர் '3ஏ' பெறுபேற்றைப் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் பிரபாகரன் பிரதீஸ் பௌதிக விஞ்ஞானத்தில் 3ஏ சித்தியைப் பெற்று ( இசற் புள்ளி- 2.3490) மாவட்ட மட்டத்தில் 8ஆவது நிலையையும் தேசிய ரீதியில் 77ஆவது நிலையையும் , விக்டர் ஜெயக்குமார் வசந்த் கோட்ப்ரே பௌதிக விஞ்ஞானத்தில் 3ஏ சித்தியைப் பெற்று (இசற் புள்ளி - 2.1397) மாவட்ட மட்டத்தில் 21ஆவது இடத்தையும் தேசிய ரீதியில் 248ஆவது நிலையையும், அஸ்வினி ஸ்கந்தராஜா வணிகப் பிரிவில் 3ஏ சித்தியைப் பெற்று ( இசற் புள்ளி - 1.7440) யாழ். மாவட்ட மட்டத்தில் 37ஆவது நிலையையும், அனோஜா சத்தியசீலன் வணிகப் பிரிவில் 3ஏ சித்தியைப் பெற்று (இசற் புள்ளி - 1.6976) மாவட்டத்தில் 45ஆவது நிலையையும் அடைந்துள்ளனர்.(அ)

# சாவகச்சேரி இந்துவில் 7 மாணவர்களுக்கு 3ஏ

சாவகச்சேரி, டிசெ.29

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 7 மாணவர்கள் 3 ஏ பெறுபேற்றைப் பெற்று சாதனை படைத்தனர்.

குறித்த பாடசாலையின் பெறுபேறுகள் வருமாறு:

**கலைப்பிரிவு**

பா.சோபனா 3ஏ, நி. சங்கவி 3ஏ, கு.தக் ஷா 3ஏ, கு.றஜிக்கா 2ஏபி, கு.அனுசா ஏ2பி, சி.சிவப்பிருந்தா ஏ2பி, செ.சௌந்தாஜெற் சாமினி 2ஏபி, ஆ.கயல்விழி ஏபிசி, க.பிரியங்கா ஏ2பி, சு.நிலானி ஏ2பி, இ.பிரியங்கா 2ஏசி, சு.தரண்யா ஏபிஎஸ், அ.நிவேகா 2ஏபி, செ.றொசானா 2ஏபி, இ.மதுசா ஏபிஎஸ், ஈ.வித்தகி ஏபிசி, த.தர்சினி ஏ2பி, தெ.விபூசன் ஏபிசி

**கணிதப் பிரிவு**

த.சதுலக்சன் 3ஏ, நா.கோபிசங்கர் 3ஏ, ஜெ.ஜெயதாரணி 3ஏ, ந.வர்ணராஜ் 2ஏபி, மு.மதுராந்தகி 2ஏபி, கு.திலக்சன் ஏ2பி, இ.விபானி ஏ2பி, சி.இளங்குமரன் ஏ2பி, உ.விதுசன் 2ஏசி, சி.யாழினி ஏபிசி, த.லக்சிகா ஏபிசி, இ.பிரலன்சா ஏபிசி, க.கஜீபன் ஏ2சி, க.சங்கர்ஜி ஏ2சி, வ.யனுசன் ஏ2சி, க.விதுஸ்லா ஏ2சி, யோ.பிந்துசன் 2பிசி, க.தர்சன் பி2சி, இ.அபிநயா ஏ2எஸ், யோ.அனோஜன் பி2சி, த.யதுர்ஷா பி2சி, மௌ.மைட்றேஜன் பி2சி, இ.ரமணரூபன் பி2சி, பா.தினுசன் பிசிஎஸ், இ.பிரதீப் பிசிஎஸ், ஆ.சாரங்கன் 3சி, த.தசிதா 3சி, பு.மிதுலன் 3சி

**விஞ்ஞானப் பிரிவு**

ப. சஜீபனா 2ஏபி, சி.கார்த்திகா ஏ2பி, கு.கௌசிகா ஏ2பி, செ.சாரங்கன் ஏபிசி, வி.மதனிகா 3பி, சி.சோபனா 3பி, த.பௌசிகா பி2சி, சி.சங்கவி பி.2சி, ஸ்ரீ.சிவஜா பிசிஎஸ், ம.சுரத்திகா 3சி, வி.கோபிநாத் 3சி, கோ.ஆனந்தகிருஸ்ணன் 3சி.

**வர்த்தகப்பிரிவு**

சி.மேனகா 3ஏ, ச.சர்மிலன் 2ஏபி, ம.பிந்துஜன் ஏபிசி, சு.பானுஷன் 2ஏபி, ம.லக்ஸிகா 2ஏசி, சூ.ஜோன்சுஜீபன் ஏ2பி, சி.டிலக்‌ஷனா ஏபிசி, தே.டனுசிகா ஏ2பி, சி.மதுமிதா ஏ2பி, பி.டிதுசனன் ஏ2சி, இ.தர்மினா ஏ2சி, கோ.டினா ஏபிசி, சி.பிரணவன் 3பி, சி.தேனுஜன் 3பி, ம.கஜீபா 3பி, வி.விமர்சனா 3பி, ப.கஜானி 2பிசி2பிசி .

**பொறியியல் தொழில்நுட்பம்**

-ப.ஜானுஷன் பி2சி, ம.செந்தூரன் பி2சி, க.தனுசாந் பி2சி, ஞா.யூட்றோய் 3சி, சி.டினிசன் 3சி, ஜெ.நிருஷா 3சி, அ.அர்ஜின் 3சி, யோ.றக்‌ஷனன் 3சி, சி.பிரவக்சன் 3சி, ஸ்ரீ.ரகுவர்மா 3சி, இ.பிரசாந் 3சிஉயிரியல்.

**தொழில்நுட்பம்**

சோ.தர்மிகா 2ஏபி(மா.நி-05), த.கஸ்தூரி ஏபிசி (மா.நி-06), ப.சாருஜா ஏ2பி (மா.நி-10), சு.பௌசிகா ஏபிசி, செ.இலக்கியா 3சி,ம.மகிந்தன் 3சி,ஸ்ரீ.நிதுண் 3சி, யோ.துளசிகா 3சி. (அ)

## ஒருவருக்கு 3ஏ பண்ணாகம் மெய்கண்டானில்

யாழ்ப்பாணம்,டிசெ.29

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் வருமாறு:

கலைப்பிரிவு - இ.ஜதுஷா - 3A,ந.கஜன் - 2AB,யோ.தர்சினி - 2BC,சி.கார்த்திகா - B2C, இ.மயூரதி - B2C,மோ.தனுசியா - 3C வர்த்தகப் பிரிவு- த.தயாளினி - 3C. (அ)

## 163,104 மாணவர்கள் பல்கலைக்கு தகுதி

கொழும்பு,டிசெ.29

கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. குறித்த பெறுபேறுகளுக்கமைவாக 253,483 பேர் தோற்றிய குறித்த பரீட்சையில் 163,104 பேர் பல்கலைகழகப் பிரவேசத்திற்கான தகுதியையும் 205 பேரின் பரீட்சைப்பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டதாகவும் பரீட்சைகள் திணைக்களம் அறிக்கை வெளியிட்டது.(அ)

## அரிசி இறக்குமதியில் அரசாங்கம் கவனம்

கொழும்பு,டிசெ.29

திறைசேரி மூலமான நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பின் கீழ் அரிசியை இறக்குமதி செய்வதற்கான பங்களிப்புத் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதேபோன்று அரிசியை இறக்குமதி செய்வதற்காக எத்தகைய தனியார் நிறுவனங்களுக்கும், ச.தொ.ச நிறுவனங்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. போதியளவு அத்தியாவசிய உற்பத்திப் பொருட்களைச் சந்தைக்கு விநியோகிக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ)

எதிரொலி
Ethiroli
வெள்ளி. 29 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

# ஏக்கராஜ்ஜியவும் சமஷ்டியும்

விடாக்கண்டன், கொடாக் கண்டன் என்ற கதா பாத்திரங்களை நேரில் பார்த்திராதவர்கள் நேற்று முன் தினம் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் அவ்விருவரையும் கண்ணாரக் கண்டிருப்பர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமுமே இவ்வாறு ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுக்காமல், ஒரே புள்ளியில் நின்று வாதம் புரிந்திருந்தார்கள்.

புதிய அரசியலமைப்புத் தொடர்பான இந்த நேரடி விவாதத்துக்காக தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் நேரெதிர் புள்ளிகளில் நின்று செயற்படும் சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் சந்திக்கப் போகின்றார்கள் என்றவுட னேயே மக்களிடத்தே எதிர்பார்ப்பு எகிறியிருந்தது.

ஆனால் அரசியலமைப்புக் குறித்தும் அதன் இடைக் கால வரைவு குறித்தும் விவாதிக்க வந்த இருவரும் ஒற் றைச் சொற்களிலேயே அந்த நிகழ்ச்சி தொடங்கி முடியும் வரை விவாதித்துக் கொண்டிருந்தனர். சுமந்திரன் ‘சமஷ்டி’ என்ற சொல்லையும், கஜேந்திரகுமார் ‘ஏக்க ராஜ்ஜிய’ என்ற சொல்லையும் வைத்தே மாறி மாறி தங்கள் பக்க கருத்தை, கிளிப்பிள்ளை போல திரும்பத் திரும்பச் சொல் லிக் கொண்டிருந்தார்கள்.

சரி, இந்தச் சொற்களில் தான் உங்களுக்குப் பிரச்சினை என்றால், அந்த சொற்களில் புதைந்திருக்கும் நன்மை, தீமைகளையவாது இருவரும் வெளிப்படுத்தியிருக்கலாம். ஏக்கராஜ்ஜிய என்ற சிங்களப் பதத்தின் பின்னால் ஒளிந் துள்ள ஆபத்துக்கள், அப்படி ஏக்கராஜ்ஜிய என்ற சொல்லை வைத்து சிங்களப் பேரினவாதம் என்னென்ன ஒடுக்கு முறைகளைச் சிறுபான்மையினர் மீது ஏவ முடியும், என் னென்ன அதிகாரங்களைப் பிடுங்கி நம்மைப் பலமிழக்கச் செய்யமுடியும் என்று கஜேந்திரகுமார் கடைசிவரையும் சொல்லவேயில்லை.

சுமந்திரன் மட்டும் சளைத்தவரா என்ன? அவரும் இப்போதுள்ள ‘சமஷ்டி’ என்ற பதத்தால் என்னென்னெ நன்மைகளை அடைய முடியும், எப்படி அடுத்த கட்டம் நோக்கி இந்த அரசியலமைப்பை அடிப்படையாக வைத்து முன்னேற முடியும், இடைக்கால அறிக்கையில் சொல்லப் பட்ட விடயங்களை மறுதலித்து அரசியலமைப்பின் இறுதி வடிவம் வந்தால் எப்படியான எதிர்ப்பை கூட்டமைப்பு வெளிப்படுத்தும், இனப்பிரச்சினைக்கான தீர்வாக இந்த அரசியலமைப்பு அமையுமா என்ற எந்தவொரு கேள் விக்கும் அவர் வாய் திறக்கவில்லை. வழக்கத்துக்கு மாறாக ஒரு அப்பாவிச் சிரிப்புடன் அந்த விவாதத்தைக் கடந்து செல்வதிலேயே சுமந்திரன் அதிக ஆர்வம் காட்டினார்.

சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் பொதுவெளியில் மூக்குடைபடாமல், சேதாரமில்லாமல் தவிர்ப்பது என்ற நோக் கில் தான் நடந்து கொண்டார்களே தவிர, மக்கள் மனதில் இடைக்கால அறிக்கை தொடர்பிலும், புதிய அரசியல மைப்புத் தொடர்பிலும் இருந்து வந்த சந்தேகங்கள், குழப்பங்கள் என்பவற்றைத் தீர்த்துக் கொள்ளும் நோக்கில் தங்கள் வாதங்களை முன்வைக்கவில்லை. அத்துடன் இருவரும் ஏக்க ராஜ்ஜியவையும், சமஷ்டியையும் தான் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தார்களே தவிர அரசியல மைப்பின் உள்ளடக்கத்துக்குள் இறங்கவேயில்லை. அதே வேளை, கிழக்கு மாகாணத்தை கூட்டமைப்புக் கைவிட்டு விட்டது, வடக்கு–கிழக்கு இணைப்புக்கு அரசியலமைப்பு இடம் கொடாது என்பன போன்ற கஜேந்திரகுமாரின் குற்றச்சாட்டுக்கு சுமந்திரனும், ‘இப்போதிருக்கும் நிலை யில் எம்மால் பெற்றுக்கொடுக்க முடிந்ததைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றே விரும்புகிறோம். அதைவிட வேறு யாரும் அதிகமாகப் பெற்றுக் கொடுக்க வந்தால் தடுக்க மாட்டோம்’ என்று சுமந்திரன் போட்ட பந்தை கஜேந்திரகுமாரும் கண்டுகொள்ளாதது போலவே நகர்ந்து விட்டார்கள்.

இப்படி உப்புச் சப்பில்லாமல் வெறுமனே ஒற்றைச் சொல்லை மாறி மாறி உருட்டி விளையாடுபவர்கள் தான் நம் தலைவர்களாம். யாரும் கேட்டால் சிரிக்கப் போகின் றார்கள்.

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”

# யாழ்.இந்துவில் 21 பேருக்கு ‘3ஏ’

யாழ்ப்பாணம்,டிசெ.29

2017ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் யாழ்.இந்துக் கல்லூரியின் 21 மாணவர்கள் ‘3 ஏ ’ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

**கணிதப்பிரிவு**

எஸ்.முகுந்தன், பி.மிஷாந், எஸ்.சண்முகபவன், எஸ்.பிரவீன், ரி.துவாரகன், எஸ்.திவாகரன், ஜே.பிரணவன், ரி.தக்ஷயன், பி.சர்வேஸ்வரன், எஸ்.ராகுலன்.

**உயிரியல் பிரிவு**

மு.வக்சலன், கே.ஸ்ரீதுசன், எஸ்.சிவகுமார், வை.சுவஸ்திகன்.

**வர்த்தகத்துறை**

எச்.சிவலக்சன், ரி.ஹரிதாஸ், எஸ்.கஜந்தன், .ஜி.கண்ணன், பி.சாருஜன், பி.நிமலகாந்தன், எஸ்.கோகுலவாசன். (அ)



# விலகினார் விஜயதாஸ

கொழும்பு, டிசெ.29

19ஆம் திருத்தத்தின் அடிப்படை யில் சபாநாயகர் தலைமையில் செயற் படும் அரசியலமைப்பு சபையிலி ருந்து விலகுவதாக முன்னாள் நீதி யமைச்சரும் நாடாளுமன்ற உறுப் பினருமான விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இவ்வாறு பதவியில் இருந்து விலகும் தீர்மானம் தொடர்பில் ஜனா திபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக வும் அவர் தெரிவித்தார். (அ)

# இலங்கை முழுதும் 2 கோடி மரங்கள்

கொழும்பு, டிசெ.29

2019 ஆம் ஆண்டு நாடுமுழு வதும் 2 கோடி மரக்கன்றுகளை நடவுள்ளதாக நாடாளுமன்ற உறுப் பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரி வித்துள்ளார்.

“ உலகை குணப்படுத்தும் தினம்” வேலைத்திட்டம் தொடர்பாக தெளி வுப்படுத்தும் ஊடக சந்திப்பு கோட்டை சேமா நிறுவனத்தில் நேற்று இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

“சகல பிரஜைகளும் ஏதாவது ஒரு தாவரத்தை நடுவது அவசியம் . எதிர்காலத்தில் முகங்கொடுக்க வுள்ள சுற்றாடல் மாற்றத்துக்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும் . நிலையான அபிவிருத் தியை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த ஆன்மிக வேலைத்திட்டமானது ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இது 66 உலக நாடுகளில் மேற்கொள் ளப்படவுள்ளது” எனவும் தேரர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் முன்னாள் கிரிக் கெட் வீரர் திலகரத்ன டில்சான், சேமா நிறுவனத்தின் தலைவர் அசோக அபயகுணவர்தன உள்ளிட்டவர்க ளும் கலந்துக்கொண்டனர். (அ)

# எம்.ஜி.ஆர் விழா தடைக்கு கூட்டமைப்பா காரணம்?

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழில் தமிழக முன்னாள் முதலமைச் சர் எம்.ஜி.ஆரின் முப்பதாவது ஆண்டு நினைவு தினம் திடீரெனத் தடை செய் யப்பட்டமைக்கு தமிழ்த் தேசியக் கூட் டமைப்பே காரணம் எனக் குற்றம் சாட் டப்பட்டுள்ளது.

அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவர் பொன்மதிமுகராஜாவின் நினைவு கூரலும் சுனாமிப் பேரலையின் நினைவேந்தல் நிகழ்வும் எம்.ஜி.ஆர் நினைவுதினமும் வருடம் தோறும் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைமை விழா ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் திடீரெனக் குறித்த நிகழ்வின் இறுதி நாளான கடந்த செவ் வாய்க்கிழமை அதனை நடைபெற விடா மல் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

சம்பவத்தின் போது, விழாவின் பிரதான ஏற்பாட்டாளரான மதிமுக ராஜா விஜயகாந்தைப் பொலிஸார் கைது செய்வதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அப்போது விழாவுக் கான முன் அனுமதியை ஏற்கனவே பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்து அது தொடர்பான ஆவணங்களை அவர் பொலிஸாரிடம் சமர்ப்பித்தார். ஆயினும் பொலிஸார் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைக் கைவிடுமாறும் இல்லை யேல் உம்மைச் சிறையிலடைக்க நேரிடுமெனவும் மிரட்டல் விடுத்தனர்.

இதனால் விழா கைவிடப்பட்டது. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பே பின்புலமாகச் செயற்பட்டது என ஏற்பாட்டாளர்களால் குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது. (அ)

# சி.ஐ.ஏ யின் கடத்தலுக்கு இலங்கையும் உடந்தை

கொழும்பு, டிசெ.29

அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையான சி.ஐ.ஏ.யின் பல கடத் தல்களுக்கு இலங்கை அரசாங்கம் உதவியளித்ததாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன் பில குற்றச்சாட்டொன்றை முன் வைத்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரத மர் மன்மோகன் சிங்கின் மகள் அம்ரித் சிங் எழுதியுள்ள நூல் ஒன் றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட் டுள்ளதாக கம்மன்பில கூறியுள்ளார்

“அமெரிக்காவினால் தேடப் பட்ட ரஷ்யக் கணினி ஊடுருவ லாளர் மனோகின் ரவ்போவிச், இலங்கைக்கு சுற்றுலாவுக்காக வந்திருந்தபோது கைது செய்யப் பட்டார். பின்னர் அவர் விடுவிக் கப்பட்டபோதும் கட்டுநாயக்க



விமான நிலையம் ஊடாக அவர் புறப்பட்டு சென்றமைக்கான எவ் வித ஆதாரங்களும் இருக்கவில்லை. இந்த நிலையில் இலங்கை அர சாங்கத்தின் ஆதரவுடன் அவர் அமெரிக்காவினால் அழைத்துச் செல்லப்பட்டதாக இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் மகள் எழுதிய நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது” என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.(அ)

# மோசடி செய்த யாழ்.வாசி தமிழகத்தில் தலைமறைவு

சென்னை,டிசெ.29

இலங்கையில் மோசடிகள் செய்து விட்டு, தமிழகம் மண்டபம் அகதி முகாமில் தங்கிருந்த யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த குடும்பத்தலைவர் ஒரு வர் தலைமறைவாகியிள்ளார் என தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபருக்கு எதிராக சாவகச் சேரி நீதிமன்றால் வழங்கப்பட்ட பிடியாணை உத்தரவுக்கு அமைய அவரைக் கைது செய்யச் சென்ற போதே இந்த விடயம் தெரிய வந்த தாக தமிழகப் பொலிஸார் கூறினர்.

“ 2015ஆம் ஆண்டில் யாழ்பாணத் தைச் சேர்ந்த கதிர்வேல் தயாபராஜ், அவரது மனைவி உதயகலா மற்றும் இரண்டு குழந்தைகள் இலங்கைப் படகு மூலம் தனுஷ்கோடிக்கு வந் தனர். அவர்களை சட்டவிரோதமாக கடவுசீட்டு இன்றி வந்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டு மண்டபம் அக திகள் முகாமில் தங்க வைக்கப்பட் டனர்.

கதிர்வேல் தயாபராஜூக்கு எதி ராக மோசடி மற்றும் பணம் கையா டல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு யாழ்ப்பாணம் - சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு இடம்பெறுகிறது.

இந்த நிலையிலேயே அவர் தலை மறைவாகி தமிழகம் வந்துள்ளார். சாவகச்சேரி நீதிமன்றால் அவருக்கு பிடியாணைக்கான கடிதத்தை இந் தியத் தூதரக அலுவலகம் மூலம் மண் டபம் பொலிஸாருக்கு அனுப்பிவைக் கப்பட்டது.

இந்தத் தகவல் அறிந்து கதிர்வேல் தயாபராஜ் மண்டபம் முகாமிலிருந்து தலைமறைவாகியுள்ளார். அவரை மண்டபம் பொலிஸார் தேடிவரு கின்றனர்” என்று தமிழகப் பொலி ஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

## இன்று நாளும் கோளும்

29.12.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 14 ஆம் நாள்

ஏகாதசி காலை 05.48 மணி வரை | பரணி பகல் 07.28 மணி வரை | சித்தயோகம்
இராகு காலம் 10.30 – 12.00 | சுபநேரம் 09.15 – 10.15 | எமகண்டம் 03.00 – 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீண்செலவு | தொய்வு | கவலை | யோகம் | ஆர்வம் | சந்தோசம் | நிறைவு | கவனம் | சலனம் | களிப்பு | வாழ்வு | தடை |



# மீளாய்வு இறுதி ஜனவரி 15 வரை

கொழும்பு,டிசெ.29

கல்வி பொதுதராதர உயர்தரப் பரீட்சை விடைதாள்கள் மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார்.

“பாடசாலை விண்ணப்பதாரர்களுக்கான மீளாய்வு விண்ணப்பப் பத்திர பெறுபேறு ஆவணத்துடன் பாடசாலை அதிபருக்கு அனுப்படும்.

தனியார் விண்ணப்பதாரர்கள் பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்படவுள்ள தேசிய பத்திரிகை மூலமாக இடம் பெறும் விளம்பரத்துக்கு அமைவான விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்ப வேண்டும்.மேலும் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத் தளத்திலும் இது தொடர்பில் வெளியிடப்படும்.பெறுபேறு தொடர்பான விபரங்களை அறிந்து கொள்ளவேண்டுமாயின் பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் கேட்டறிந்து கொள்ள முடியும்.0112784208/ 0112784537/ 0113188350/ 0113140314.அவசரத் தொலைபேசி இலக்கம் 1911” என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## மகிந்த வீட்டில் மின் துண்டிப்பு

கொழும்பு,டிசெ.29

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் விஜேராமையில் அமைந்துள்ள உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று வியாழக் கிழமை ஒரு மணிநேரம் மின் துண்டிக்கப்பட்டமையால் நீர் விநியோகமும் தடைப்பட்டது.

குறித்த வீட்டிலுள்ள மின் பிறப்பாக்கி இயந்திரம் பழுதாகி விட்டது. அதைச் சீராக்கும் பொறுப்புக் கடற்படையினருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இது தொடர்பாகப் பல முறை அறிவுறுத்தியும் மின்பிறப்பாக் கியைச் சீராக்கப் போதுமான அளவு பணம் இல்லை எனக் கடற்படையினர் தெரிவித்து, அதனைத் தவிர்த்து வந்தனர். இந்த நிலையில், நேற்று திடீரென மின் தடை ஏற்பட்டதால், மகிந்தவின் இல்லத்தில் இருள் சூழ்ந்தது. அத்துடன் நீர் விநியோகமும் தடைப்பட்டது. (அ)

## மூன்று போராளிகள் நேற்று விடுவிப்பு



வவுனியா, டிசெ.29

வவுனியா - பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த முன்னாள் போராளிகள் மூவர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலைய பொறுப்பதிகாரி கப்டன் குணசேகர தலைமையில் நேற்று நடைபெற்றது.

கடந்த ஒரு வருடமாக அங்கு புனர்வாழ்வு பெற்று வந்த மார்க்கண்டு நேவிநாதன் (யாழ்ப்பாணம்), ஆறுமுகம் அருள்பிரகாஷ் (கிளிநொச்சி), பெர்னாண்டோ எமில்தாஸ் (முல்லைத்தீவு) ஆகிய முன்னாள் போராளிகளே அவர்களின் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், சர்வ சமயத்தலைவர்கள், புனர்வாழ்வு ஆணையாளர், கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டத்தின் பின் இணைப்பு அதிகாரிகள், பூந்தோட்டம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வன்னி விமானப் படை நிலையப் பொறுப்பதிகாரி, முன்னாள் போராளிகளின் குடும்பத்தினர் என பலரும் கலந்துகொண்டனர்.(அ)

## மைத்திரியுடன் இணைந்தார் சந்திரசிறி

கொழும்பு,டிசெ.29

ஒன்றிணைந்த எதிரணியின் பிரபல உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவருமான சோமவீர சந்திரசிறி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று வியாழக்கிழமை இணைந்து கொண்டார். ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாகவும்,நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் லங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காகப் பல அர்ப்பணிப்புக்களைச் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## புலிகளுடனான போரில் கண்ணிழந்தவர் சாவு

காஷ்மீர், டிசெ.29

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வலது கண்ணையும், இடதுகை விரல்களையும் இழந்த, ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரியான கேணல் அனில் கௌல் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றுவதற்காக 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்திய அமைதிப்படையினர் ஒப்பரேசன் பவான் என்ற நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். இதில் கேணல் அனில் கௌல் அவர்களின் வலது கண்ணும், இடதுகை விரல்களும் யுத்தத்தில் பறிபோ



யிருந்தன. இதன் பின்னர் நாடு திரும்பிய அவர், சமூக சேவைகளில் ஈடுபட்டு வந்தார். இந்த நிலையிலேயே தன்னுடைய சொந்த இடமான காஷ்மீரில் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்துள்ளார். (அ)

## “புத்த சுட்டக் வாடி வெண்ட” விளையாட்டு வேண்டாம்

பாக்கப் பாக்க விசராக் கிடக்கு. அவர் உங்களை வரப் போறன் எண்டு கேட்டவரே? அவரைக் கொண்டு வந்து வைச்சுக் கொண்டு சிப்பிலியாட்டுறியள். உங்கடை சொல்லைக் கேக்கேல்லை எண்ட உடனை குத்திமுறியிறியள். குத்துக்கறணம் போடுறியள். சரி ஒவ்வொரு நாளும் பத்திரிகைக்குப் பேட்டி குடுக்கிறியள். ஒரு நாளாவது தன்னும் பேப்பர்காரரைக் கூப்பிட்டு சீ.எம். விட்ட பிழையைளைச் சொல்லுங்கோ பாப்பம். அப்ப பிழை எண்டு கண்டால் சனம் அவரைச் சீற்றை விட்டுக் கலைக்கும். அதைவிட்டிட்டு அந்தாளோடை யாரி கட்டிச் சண்டைப் பிடிச்சுக் கொண்டெல்லே நிக்கிறியள். இப்ப பாக்க இரண்டு பகுதிக்கும் சுறணை இல்லைப் போலை கிடக்கு.

உங்களுக்குக் கட்சி நடத்தத் தெரியாதெண்டு எல்லாருக்கும் வெளிச்சப்போச்சுது. இந்த எலக்ஸனோடை கன விசியம் சனத்துக்குத் தெரிஞ்சு போச்சு. தமிழ்ச் சனத்துக்கு தலைமை தாங்க உங்களாலை ஏலாது எண்ட விசியம் எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சு. இங்கிலீஸ் தெரிஞ்சவை உங்களை ஏமாத்திறாங்களெண்டும் தெரிஞ்சு போச்சுது. இனி அரையிலை வேட்டி கிடக்கவோ? வேண்டாமோ? எண்டும் கேக்கும். சொல்லுங்கோவன் பதிலை.

முதலியின்ரை கான்போனிலை பாத்த விசியந்தான் இது. “விக்கியின் கருத்துக்குப் பொறுத்திருந்து பதிலளிப்பேன்” – எண்டு மாவை சூளுரை. அதென்ன பொறுத்திருந்து...! அவர் சொன்னது பிழை எண்டு கண்டால் உடனை.. சுடச் சுடக் குடுக்க வேண்டியதுதானே? அதன்ன பொறுத்திருந்து... அப்ப நீர் யோசிச்சுத்தான் பதிலைச் சொல்லப் போறீர் எண்டால், அப்ப கதைதானே சொல்லப் போறீர். அது கதை எண்ட படியால்... அது கதை தானே?. உண்மையா அவர் சொல்லுறது பொய், பிழை, பித்தலாட்டம் எண்டு கண்டால் உடனை...உடனை... சுண்டிச் சுண்டிப் பதிலைச் சொல்ல வேண்டியது தானே?

சரி, கட்சிக்கை இருக்கிற உங்கடை ஒரு ஆள். அதுவும் உங்களைக் காரசாரமாச் சாடி இருக்கிறார் எண்டால், அதை எல்லே முதல் பாக்க வேணும். அது கட்டாயமெல்லே? அதைவிட்டிட்டு அதை இன்னும் நான் வாசிக்கேல்லை, ஒரு ஐஞ்சாறு நாளையாலை ஆற அமர இருந்து பாத்திட்டுப் பதிலைச் சொல்லுறன் எண்டால், சனம் பிரச்சினையை மறந்த பிறகு நீர் சொன்னால் என்ன? சொல்லாட்டி என்ன?

இப்ப உங்களோடை சேந்து வாறதெண்டால் இன்ன.. இன்ன நீங்கள் செய்ய வேணும் எண்டு அவர் வெளிப்படையாக் கேக்கிறார். அதையாவது “உது சரிவராதெண்டு” சொல்லுங்கோ பாப்பம். சொல்ல மாட்டியள். அவர் போட்ட பூட்டை உங்களாலை துறக்கேலாதெண்டு எல்லாருக்கும் வடிவாத் தெரியும். ஆனபடியால் சும்மா அறிக்கையளை விட்டுக் கொண்டு, ஆளுக்கு ஆள் கொழுத்தாடு பிடிச்சு எங்கடை மானத்தை வாங்காதையுங்கோ.

உங்கை உள்ளூராட்சி சபையளை நீங்கள் போய்த்தான் நிமித்த வேணும் எண்டில்லை. இதுமட்டிலை நிமித்தினது போதும். ஊரை டி.எஸ்மார் வடிவாப் பாப்பினம். நீங்கள் போய் இன்னும் கோளாக்காமல் இருந்தாலே பெரிய காரியம். சனம் எல்லாத்திலையும் சைபராப் போச்சுது. கட்சியிலை ஆர்? எங்கை கேக்கிறது? எண்டதுக்கே அடிபிடியும் சண்டையும், வாய்ச் சவடாலும் எண்டால்? நீங்கள் போய் எங்கடை சனத்துக்குச் சேவை செய்து, அதாலை சனம் நல்லா வந்து...? நடந்தமாதிரித்தான்.

எல்லாத்தையும் சொன்னனான். சனம் கதைக்கிற இன்னொரு முக்கியமான விசியத்தையும் சொல்லத்தானே வேணும். நீங்கள் வாரிசுகளைக் கொண்டந்து கட்சிக்கை விடுகிற விளையாட்டை நிப்பாட்டுங்கோ! அவை வாற தெண்டால் கட்சியிலை வந்து முறைப்படி சேந்து, சனத்தைச் சந்திச்சு நாலு மேடையிலை பேசி சனம் அவரைக் கொண்டு வரட்டும். அதை விட்டிட்டு மகிந்த செய்த மாதிரி “புத்த வாடி வெண்ட” விளையாட்டு வேண்டாம். மகிந்தாக்கும் மாவைக்கும் என்ன வித்தியாசம் எண்டு சனந் சொல்லிச் சிரிக்கிது. உது வேணுமோ? உந்த நக்கல் வேணுமோ? எல்லாம் சீத்துவக் கேடாப் போச்சுது.

- வில்லங்கம் விநாசி

# உதயன் மீது டக்ளஸ் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.29

தங்கள் மீது வெறுப்புணர்வைத் தோற்றுவிக்குக்கும் வகையில் செய்தி வெளியிட்ட உதயன் பத்திரிகை மீது, நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் திணைக்களத்தில் ஈ.பி.டி.பி முறைப்பாடு செய்துள்ளது.

“2017 டிசம்பர் 28 ம் திகதி யாழ்ப்பாணத்தில் பிரசுரிக்கப்பட்ட உதயன் செய்திப் பத்திரிகையில் “யானை வந்ததற்காக ஈ.பி.டி.பியின் முறைப்பாடு” என்ற தலைப்பில் செய்தி ஒன்றை பிரசுரித்து எங்கள் கட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும்முறையாக கெட்ட எண்ணத்துடன் செய்தி ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்தி பிரசுரிக்கப்பட்டமையால் யாழ்ப்பாண பிரதேசத்தில் மக்கள் மத்தியில் எமது கட்சிக்கு எதிரான வெறுப்புணர்வு தோற்றுவிக்கப்பட்டுள்ளதால், இது தொடர்பாக ஒரு விசாரணையை மேற்கொண்டு அந்தப் பத்திரிக்கையில் அச்செய்தியைத் திருத்துவதுடன், அதே அளவு முக்கியமளித்து அந்தச் செய்தியை பிரசுரிக்குமாறு வேண்டுவதுடன், உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். இச்செய்தி தொடர்பான உண்மை நிலவரத்தை நீங்கள் அறிந்துள்ள காரணத்தினால், அதற்கு எதிராக உங்கள் காரியாலயத்தின் தேர்தல் அதிகாரி அப்பத்திரிக்கைக்கு கருத்து வெளியிட்டிருந்தால், அவரின் கூற்றையும் திருத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். இச்செய்தியில் குறிப்பிட்டவாறு, கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஈபிடிபியினால் செய்யப்படவில்லை என்பதை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார் என்றும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட செய்தியை உரிய நடவடிக்கை எடுப்பதற்காக இத்துடன் இணைத்துள்ளதுடன், நீங்கள் இது தொடர்பாக விரைவான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என்றும் நம்புகின்றேன்” என ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (அ)

# 60 அடி பள்ளத்தில் சிங்களப் பாடகி



கொழும்பு,டிசெ.29
தெனியாய இசை நிகழ்ச்சியொன்றில் கலந்துகொள்வதற்காகச் சென்ற பிரபல சிங்களப் பாடகி ஜின்ஜர் என்பவரின் வாகனம் நேற்று வியாழக்கிழமை விபத்துக்குள்ளாகியது. இதில் பயணம் செய்த நால்வரும் படுகாயமடைந்த நிலையில் தெனியாய ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஜின்ஜர் மாத்தறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
சாரதிக்குத் தூக்கம் ஏற்பட்டதால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கக் கூடும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சந்தர்ப்பத்தில், குறித்த சொகுசு வாகனத்தில் ஜின்ஜருடன் அவரின் 7 வயது மகன் மற்றும் அவரின் உறவினரின் மகன் மற்றும் சாரதி ஆகியோர் பயணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அந்த நாள் ஞாபகம்...!



**1993.12.29**

உலகின் மிகப்பெரிய செம்பினாலான புத்தர் சிலை ஹொங்கொங்கில் அமைக்கப்பட்டது.

## ஜப்பானின் அமைச்சர் இலங்கை வருகை

கொழும்பு,டிசெ.29
ஜப்பானின் வெளியுறவு அமைச்சர் டாரோ கொனோ உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.
ஜப்பானின் வெளியுறவு அமைச்சர் இலங்கைக்குப் 15 வருடங்களின் பின்னர் மேற்கொள்ளும் பயணமாக இது அமையவுள்ளது. அவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில், ஜனாதிபதி மற்றும் பிரதமர், மற்றும் வெளியுறவு அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரைச் சந்திக்கவுள்ளார். இதன்போது அரசியல் மற்றும் முதலீட்டுப் பொருளாதாரத் திட்டங்கள் குறித்தும் அவர் பேசவுள்ளார். (அ)

# வறுமைக் குற்றவாளிகளை விடுவிக்க மாற்று ஏற்பாடு

## அரசிடம் ஐ.நா. குழு கோரிக்கை

கொழும்பு,டிசெ.29
வறுமை நிலையே இலங்கையில் மக்கள் குற்றங்களில் ஈடுபடுவதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது. எனவே வறுமை காரணமாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படுவோரைக் குற்றவாளிகளாகப் பார்ப்பதற்குப் பதில் மாற்றுத் திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.
கைது செய்யப்படுபவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பயங்கரவாதச் தடைச் சட்டத்துக்குக் கீழ் கைது செய்யப்பட்டிருந்தாலும் கூட, திறமையான சட்டப் பிரசன்னம் இருக்குமானால் அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். எனினும் ஏனையவர்கள் தடுத்து வைக்கப்படுகிறார்கள். இந்தநிலையில் அவர்கள் விடுவிக்கப்படுவதற்கு எத்தனை காலம் செல்லும் என்பதைக் கூறமுடியாத நிலை உள்ளதாக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகளின் பலவந்தமாகத் தடுத்து வைத்தல் தொடர்பான குழு தமது அறிக்கையில் தெரிவித்தது.
தடுப்பில் உள்ள பலரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இந்த விடயம் வெளியானதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
தென்மாகாண சமூக சேவை அமைச்சினால் நடத்தப்படும் அம்பலாங்கொட றிதிகம தடுப்பு முகாமில் ஒவ்வொரு மாதமும் 30 வரையான பிச்சையெடுப்போர் தடுத்து வைக்கப்படுகின்றனர். பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் மற்றும் முதியவர்கள், மதுவுக்கு அடிமையானவர்களுக்கு வீரவிலவில் தடுப்பு முகாம் அமைந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் குழு சுட்டிக்காட்டியது. (அ)

## 17 இந்திய மீனவர்கள் இன்று விடுதலையாவர்

மன்னார், டிசெ.29
மன்னார் கடற் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக தெரிவித்து கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் உள்ள 17 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்வதற்கான நகர்த்தல் பத்திரம் மன்னார் நீதிமன்றில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
கடந்த ஒக்டோபர் மாதம் முதல் மூன்று பிரிவுகளாக மன்னார் கடற்பிராந்தியத்தில் அத்துமீறி நுழைந்து 03 இழுவைப்படகுகளின் மூலம் மீன்பிடியில் ஈடுபட்டதாக தெரிவித்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களை, மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்திருந்தனர். இவர்களைக் கடற்றொழில் அதிகாரிகள், மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதைத் தொடர்ந்து இவர்கள் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.
இவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சட்டமா அதிபரின் திணைக்களத்திடமிருந்து மன்னார் கடற்றொழில் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் கிடைக்கப் பெற்றது.
இதனைத் தொடர்ந்து இவர்களை விடுவிக்கக்கோரி மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் திணைக்கள அதிகாரிகள் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்துள்ளனர். இதைத் தொடர்ந்து 17 இந்திய மீனவர்களும் இன்று வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றில் வைத்து விடுவிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அபராதத்துக்கு ஏன் தாமதம்?

கொழும்பு,டிசெ.29
வீதிப் போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபடும் சாரதிகளுக்கு 25000 ரூபா அபராதம் விதிக்கும் சட்டத்தை அமுல்படுத்துவதற்குக் காலம் தாழ்த்தப்படுவதனால் அதிகளவில் வாகன விபத்துக்கள் இடம்பெறுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
வீதிப் போக்குவரத்து சட்ட மீறல்கள் தொடர்பான சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டுமென சமூகத்தில் எழுந்த கருத்துக்களின் அடிப்படையில் அபராதத் தொகை உயர்வு குறித்த உத்தேசச் சட்டம் உருவாக்கப்பட்டது. எனினும், இதனை உருவாக்கும் நடவடிக்கைகள் இதுவரையில் பூர்த்தியாகவில்லை. இதன் காரணமாக 25000 ரூபா அபராதம் விதிக்கும் நடைமுறை காலம் தாழ்த்தப்படுவதாக வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபையின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.
25000 ரூபா அபராதம் தொடர்பிலான அறிவிப்பு விடுக்கப்பட்ட போது விபத்துக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவானதாகவும் பின்னர், மீளவும் தற்போது வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## கச்சதீவுப் பெருவிழா தமிழகத்தவர் வருவரா?



கொழும்பு,டிசெ.29
கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருப்பலித் திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23 ஆம் மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.
இந்த வருடாந்த திருவிழாவில் இலங்கையில் இருந்தும் தமிழகத்தில் இருந்தும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். கடந்த முறை முறையான அறிவிப்பு இல்லாமையால், தமிழக மக்கள் பெரியளவில் இதில் கலந்து கொண்டிருக்கவில்லை. எனினும் இந்த முறை மிழகத்தின் யாத்திரிகர்ளுக்கு இலங்கை அழைப்பு விடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு தமிழக யாத்திரிகர்களுக்கு இன்னும் விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## கரவெட்டிப் பிரதேச கலாசார விழா நேற்று







கரவெட்டி, டிசெ.29
வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் மற்றும் வடமராட்சி தெற்கு மேற்கு கலாசார பேரவையும், கரவெட்டிப் பிரதேசசெயலகமும் இணைந்து நடத்திய கலாசார விழா மூத்தவிநாயகர் ஆலய மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. கரவெட்டிப் பிரதேசெயலர் க.சிறிமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், பிரதம விருந்தினராக யாழ், மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் சுகுணரதி தெய்வேந்திரம், சிறப்பு விருந்தினராக மருதங்கேணிப் பிரதேசசெயலர் க.கனகேஸ்வரன், பருத்தித்துறைப் பிரதேசெயலர் ஆ.சிறி, யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.த ஜெயசீலன் பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி அபிராமி பாலமுரளி, கௌரவ விருந்தனராக இசைக்கலைஞர் தம்பு சரோஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-11)

# யாழ். இளைஞர் சுவிஸில் கைது

பேர்ன், டிசெ.29


சுவிட்ஸர்லாந்தில் அகதியாகத் தஞ்சம் கோரிய ஈழத் தமிழர் ஒருவர் அந்த நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், பொலிகண்டியைச் சேர்ந்த செல்வராஜா கோகிலன்(வயது-32) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

சுவிஸின் சுக் எனே, மாகாணத்தில் உள்ள அகதி முகாமில் குறித்த இளைஞர் தங்கியிருந்த வேளையில், கடந்த 13ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தத் தகவல் தற்போதே வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த நபரின் அகத் அந்தஸ்துக் கோரிக்கை சுவிஸ் அரசால் நிராகரிக்கப்பட்டதாலேயே அவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையில் போருக்குப் பின்னரும் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து படையினர் சித்திரவதைகளை மேற்கொள்வதாக, ஆதாரங்களோடு அண்மையில் அசோசியட் பிரஸ் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த இளைஞர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அவர் ஆபத்தை எதிர்நோக்கக்கூடுமெனவும் அவரின் உறவினர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.(அ)




## ஜனவரி 2 இல்

### முதலாம் தவணை

கொழும்பு, டிசெ.29

2018ஆம் ஆண்டு முதலாந் தவணைக்காக பாடசாலைகள் ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

எனினும் 58 பாடசாலைகள் ஜனவரி மாதம் 13ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும்.

நடந்து முடிந்த சாதாரண தர பரீட்சையின் வினாத்தாள் திருத்தும் மத்திய நிலையமாக பயன்படுத்தப்படும் குறித்த 58 பாடசாலைகளும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தொடர்ச்சிகள்

### வாளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும்பலை ஒன்றை துரத்திச் சென்ற மாவடி இளைஞர்கள், அந்தக் கும்பலைச் சேர்ந்த ஒருவரை மடக்கிப் பிடித்தனர். அவருடன் வந்ததாகக் கூறப்படும் மேலும் 5 பேர் தப்பி ஓடிவிட்டனர்.

ஊரெழுவைச் சேர்ந்த இளைஞன் ஒருவரே இவ்வாறு வாளுடன் பிடிபட்டார். சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, அவர்கள் கொள்ளைக் கும்பலைச் சேர்ந்தவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, கொள்ளையர்கள் நடமாடிய அதேபகுதியிலுள்ள வீடொன்றுக்குள் கடந்தவாரம் கொள்ளை முயற்சி ஒன்று இடம்பெற்றது. அங்கு வசிக்கும் பெண்ணின் கழுத்தை கொள்ளையர்கள் நெரிக்க முற்பட்ட போது, அந்தப் பெண் அபாயக் குரல் எழுப்பியதால் கொள்ளையர்கள் தப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

### கேப்பாபிலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 10 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிகாரிகள், காணி உரிமையாளர்கள் மற்றும் பெருமளவான இராணுவத்தினரும் பங்கேற்றனர்.

கேப்பாபிலவில் பொதுமக்களின் காணிகளில் அமைந்துள்ள படைத்தளங்களை இடம்மாற்றுவதற்கு, புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அமைச்சு 148 மில்லியன் ரூபா நிதியை இராணுவத்துக்கு வழங்கியிருந்தது.

இதையடுத்து, படைத்தளங்கள் இடம் மாற்றப்பட்டன. அந்தக் காணிகளே இன்று அதிகாரபூர்வமாக கையளிக்கப்பட்டன.

குறித்த பகுதியில் உள்ள தங்களின் காணிகளை விடுவிக்கக் கோரி அந்தப் பகுதி மக்கள் சுமார் 300 நாட்களுக்கும் மேலாகப் போராடி வந்த நிலையிலேயே,அங்குள்ள ஒரு தொகுதிக் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- இந்த காணிகளுக்குள் தாங்கள் வரும்போது 8 வீடுகள் காணப்பட்டதாகவும், அவை சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்குவதாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் குறித்த காணிகளுக்குள் தாம் அமைத்த 29 வீடுகளையும் மக்களுக்கே வழங்குவதாகவும் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இதேவேளை, கேப்பாபிலவில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது எஞ்சிய நிலங்களும் முழுமையாக விடுவிக்கப்படும் வரை போராட்டம் தொடரும் என்று மக்கள் அறிவித்துள்ளனர். (அ)

### யாழ்.சிற்றங்காடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாநகர சபையால் புதிதாக அமைத்துக்கொடுக்கப்பட்ட சிற்றங்காடி கடை தொகுதியில் அமானுஷ்ய சக்திகளின் நடமாட்டம் உள்ளதாகச் செய்தி வெளியாகியிருந்தது.

“சிற்றங்காடி கடைத் தொகுதியில் 76 கடைகள் உள்ளன. அதன் மூலம் 125 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இரண்டு வியாபாரிகள் முன்னர் உயிரிழந்தனர்.

அவர்கள் இருவரும் நீண்டகாலமாக நோய் வாய்ப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில்தான் உயிரிழந்தனர். ஒருவர் சிறுநீரகம் செயலிழந்து இருந்தமையால் நோய் வாய்ப்பட்டு இறந்தார். மற்றவர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்தார். அவர்கள் பேய் பிசாசு அடித்து உயிரிழக்கவில்லை. நோய் வாய்ப்பட்டே உயிரிழந்தார்கள்.

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரிடம் புதிய கடைத்தொகுதிக்கு சாந்தி செய்ய வேண்டும் எனக் கோரி இருந்தது உண்மைதான். எமது இந்து மரபின் படி நாம் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் போதும் புதிய கடையைத் திறக்கும் போதும் சாந்தி செய்வது வழமை. ஆனால் இந்த கடைகள் திறக்கும் போது அவ்வாறு சாந்தி செய்யவில்லை.

ஆடி மாதத்தில் கடை திறந்தமையால் மனதுக்கு சங்கடமாக இருக்கின்றது. அதனால் சாந்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து தருமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளரை கோரியுள்ளோம். அவரும் அதற்குச் சம்மதித்துள்ளார்.

நாம் சாந்தி செய்யக் கோரியது எமது மதம் சார்ந்த நம்பிக்கைக்காகவே தவிர, பேய் பிசாசுக்கு பயந்தில்லை. பேய் பிசாசு என்பதை இந்த காலத்தில் நம்புவது முட்டாள் தனமான மூட நம்பிக்கை. அப்படி இங்கு எதுவுமில்லை. தொழில் போட்டி காரணமாக சிலர் அவ்வாறான கட்டுக் கதைகளை கட்டிவிட்டுள்ளனர். மக்கள் அச்சப்படாமல் எமது கடைகளுக்கு வந்து பொருள்களைக் கொள்வனவு செய்து செல்லலாம்” என்று வியாபாரிகள் மேலும் தெரிவித்தனர். (அ)

### அகில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பது தவறு” என்று கூறியுள்ளார் அகில இலங்கை ரீதியில் பௌதீக விஞ்ஞானத் துறையில் முதலிடம் பிடித்த துவாரகன்.

2017ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில், பௌதீக விஞ்ஞான பிரிவில் அகில இலங்கை ரீதியில் யாழ். ஹாட்லி கல்லூரி மாணவரான ஸ்ரீதரன் துவாரகன் பௌதீக விஞ்ஞான பிரிவில் முதலிடம் பெற்றுள்ளார். புலோலி, புற்றளை, உபயகதிர்காமத்தைச் சேர்ந்த குறித்த மாணவன் யாழ். வடமராட்சி வலய கணினி வள முகாமையாளர் சிறிதரனின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தன்னுடைய சாதனைகள் பற்றி ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே துவாரகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிப்பேன். நான் ஒரேயோரு மேலதிக வகுப்புக்கு மாத்திரமே சென்றேன். இதனால் எனக்குப் படிப்பதற்கு நீண்ட நேரம் கிடைத்தது.மேலும் எனது தந்தை ஒரு தகவல் தொழிநுட்பவியல் ஆசிரியராக விருப்பதால் எனக்குக் கணினியைப் பயன்படுத்துவது மிக இலகுவாக இருந்ததோடு எனக்குப் புரிந்து கொள்ள முடியாத பாடங்களை இணையத்தில் தேடிப் பெற்றுப் படித்தமையால் பல பாடங்களை இலகுவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. அதுமட்டுமின்றி , எனது பாடசாலையில் உள்ள நூலகத்தில் பாடம் சம்பபந்தப்பட்ட பல விடங்களைத் தேடிப் படித்தேன். இன்னும் கடந்த கால வினாத்தாள்கள் அனைத்தையும் செய்து பார்த்துள்ளேன். இதனால் எனக்கு ஞாபக சக்தி மிகவும் அதிகமாவிருக்கும்.மேலும் , நான் இந்தப் பெறுபேறைப் பெற உதவியாக இருந்த எனது பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்” என அவர் தெரிவித்தார். (அ)

### வாக்குப்பெற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியும் அவரது பெயரைப் பயன்படுத்தி வாக்கு வேட்டையில் இறங்கியிருந்தன. இதனால் சினமடைந்த நிலையிலேயே முதலமைச்சர் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

“ எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தல் பற்றி நான் எந்தவித முடிவும் எடுக்காமலேயே என்னுடைய சின்னம் பற்றி எல்லாம் கருத்துக்கள் வெளிவந்துள்ளன.

நான் ஏற்கனவே எனது கருத்துக்களை வெளியிட்டு விட்டேன். ஊழலற்ற, நேர்மையான, தகைமையுடைய, தமது மக்களை நேசிக்கும் வேட்பாளர்களுக்கு உங்கள் வாக்குகளை அளியுங்கள் என்று கோரியுள்ளேன். உள்ளூராட்சியில் கட்சிகள் புகுந்ததால் இதுகாறும் எமது உள்ளூராட்சி மன்றங்கள் பலவிதமான சிக்கல்களை எதிர் நோக்கி வந்துள்ளன. இதே போன்றுதான் முன்னர் அரசியல்வாதிகளும் அரசியலும் புகுந்து எமது கூட்டுறவுச் சங்கங்களை சின்னாபின்னமாக்கி வைத்தன. நான் இதுவரையில் எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தல் பற்றியோ கட்சி சின்னம் பற்றியோ இப்போது சிந்திக்கவில்லை. எனது அரசியல் கொள்கைகள் கிட்டத்தட்ட தமிழ் மக்கள் பேரவையின் கொள்கைகளை ஒத்தது என்று ஏற்கனவே கூறியுள்ளேன். அத்துடன் அக்கொள்கையானது 2013ம் ஆண்டில் வெளிவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் ஒத்தது என்றும் கூறியுள்ளேன். தமிழ் மக்கள் பேரவையின் கருத்துக்களுடன் ஒத்த கருத்துடையவர்களை நான் மதிக்கின்றேன்” என்று அந்த அறிக்கையில் முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது



# வெளிநாட்டவருக்கு இனி வேலை இல்லை

சவுதி , டிசெ.29

சவுதி அரேபியாவில் உள்ள நகைக்கடைகளில் வெளிநாட்டினருக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று அந்த நாட்டுத் தொழிலாளர் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சகம் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தது.

சவுதி அரேபியாவில் சுமார் 35 ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநாட்டினர்கள், அங்கு உள்ள 6 ஆயிரம் தங்கம் மற்றும் வெள்ளி நகைத் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றனர். இனி நகைக் கடைகளில் வெளிநாட்டு வேலையாட்களை பணிகளில் அமர்த்தக் கூடாது என்று, தொழிலாளர் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சகம் முடிவெடுத்துள்ளது.

இந்த முடிவு உள்ளூர் மயமாக்குதலின் ஒரு பகுதியாகும்.மேலும் சவுதி அரேபியாவின் அதிகாரத்தின் கீழ் உள்ள குவாசிம், டாபக், நாஜ்ரன், பாகா, அசிர், வடக்கு எல்லை மற்றும் ஜாசான் ஆகிய 7 பிராந்தியங்களில் உள்ள மக்களுக்கு, உரிய பயிற்சி அளிக்கப்பட்டு நகைக் கடைகளில் பணிக்கமர்த்தப்படவுள்ளனர். (இ)

# ஏவுகணை அதிகாரிகளுக்கு பொருளாதாரத் தடை

வோஷிங்டென்,டிசெ.29

வட கொரியாவின் ஏவுகணைத் திட்டத்துக்கு உறுதுணை புரிந்த 2 அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக வட கொரியா, பல்வேறு அணு ஆயுத ஏவுகணைச் சோதனைகளை வெளிப்படையாகச் செய்து வருகிறது. மேலும் வட கொரியாவிலிருந்து ஏவப்படும் ஏவுகணையானது அமெரிக்காவின் எந்த நகரத்தையும் சென்று தாக்கக்கூடியது என்ற வகையில் வட கொரியா அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையில் வட கொரியா மீது பொருளாதாரத் தடைகளை ஐ.நா. விதித்தது. தற்போது வட கொரியாவைச் சேர்ந்த 2 ஏவுகணைத் தயாரிப்பாளர்கள் மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க நிதிஅமைச்சர் ஸ்டீவன் நுச்சின் “வடகொரியாவைத் தனிமைப்படுத்தும் நோக்கில், அந்த நாட்டைச் சேர்ந்த 2 ஏவுகணைத் தயாரிப்பாளர்கள் மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்தது. அணு ஆயுதங்கள் இல்லாத கொரிய தீபகற்பத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கம்.

வடகொரியாவைச் சேர்ந்த ஏவுகணைத் தயாரிப்பு அதிகாரிகள் கிம்ஜாங் சிக், ரி பியோங் சோல்ஆகியோர் மீது இந்த பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணைத் திட்டத்தில் இருவருமே முக்கிய பங்காற்றி வருகின்றனர்” எனத் தெரிவித்தார். மேலும் அமெரிக்காவுக்கும், வட கொரியாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்கப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என ரஷ்யா அறிவித்துள்ளது. (இ)



## ஆப்கானில் தாக்குதல்

# 40 பேர் சாவு 30 பேர் காயம்

காபூல், டிசெ.29

ஆப்கானிஸ்தான் காபூலின் டெபியான் சமூக - கலாசார மையம் மீது நேற்று வியாழக்கிழமை நடத்திய தாக்குதலில் 40 பேர் பலியாகிய தோடு 30 பேர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்கக் கூட்டுப் படைகள் முகாமிட்டிருக்கும் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் மசூதி அருகே டெபியான் சமூக- கலாசார மையம் மீது நேற்றுச் சக்திவாய்ந்த வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. யாரைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது என்பது தெரியவில்லை. என்றும், பாதுகாப்புத் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ)

# கொரில்லா ஜீவா



சென்னை,டிசெ.29

பிரபல நடிகர் ஜீவா அடுத்ததாகக் கொரில்லா படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

‘கலகலப்பு-2’, ஹகீ’ என நடித்து வரும் ஜீவா, அடுத்ததாக டான் சாண்டி இயக்கத்தில் நடிக்கும் நகைச்சுவைப் படத்துக்கு ஹகொரில்லா’ என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ள படத்தில் நடிக்கத் தயாராகியுள்ளார்.

திருட்டுச் சம்பந்தப்பட்ட காமெடிப் படமாக உருவாகும் குறித்த படம் ஜீவாவின் 29 ஆவது படமாகும். இதற்கு ஹவிக்ரம் வேதா’ புகழ் சாம் சி.எஸ் இசையமைக்கிறார். ரூபன் படத்தொகுப்பைக் கவனிக்கிறார். இதில் ரசிகர்களை ஆச்சர்யப்படுத்தும் விஷயம் ஒன்றும் இடம்பெறுவதாக இயக்குநர் தெரிவித்துள்ளார். (இ)

# டிரம்ப் பெயரில் ரயில் நிலையம்

## நன்றிக்கடன் செலுத்தும் இஸ்ரேல்



டெல் அவிவ்,டிசெ.29

ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்த டிரம்ப்புக்கு நன்றிக் கடனாக, அந்த நகரில் அமையவுள்ள சுரங்க ரயில் நிலையத்துக்கு அவருடைய பெயரை வைக்க இஸ்ரேல் போக்குவரத்து அமைச்சர் நேற்று வியாழக்கிழமை விருப்பம் தெரிவித்தார்.

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த மாதம் அறிவிப்பை வெளியிட்டார். மேலும், தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றவும் அவர் உத்தரவிட்டார். டிரம்ப் முடிவுக்கு உலக நாடுகள் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தன. பாலஸ்தீனத்தில் இது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், டெல் அவிவ் நகரில் இருந்து மேற்குக் கரைப் பகுதியில் உள்ள ஜெருசலேமுக்குப் புதிதாக சுரங்க ரயில் பாதை அமைப்பதற்கான திட்ட அறிக்கையைப் போக்குவரத்து அமைச்சர் கட்ஸ், அரசிடம் சமர்பித்தார். ஜெருசலேம் நகரில் உள்ள யூதர்களின் புனித இடமான மேற்குச் சுவரின் அடியிலும்,பழமை நகரப் பகுதியில் ரயில் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. (இ)

# 3 சூரியன்கள்



பீஜிங்,டிசெ.29

வடகிழக்குச் சீனாவில் மூன்று சூரியன்கள் நேற்று முன்தினம் புதன் கிழமை திடீரெனத் தோன்றின.

15 நிமிடங்கள் வரை நீடித்த இந்த அரிய காட்சியை ஏராளமான மக்கள் கண்டுகளித்தனர். வளிமண்டலத்தில் காணப்படும் அதிகப்படியான ஈரப்பதன் மற்றும் மேகக் கூட்டங்களின் காரணமாக சூரியன் இவ்வாறு காட்சியளித்ததாக வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (இ)

# சண்டைக்கோழி– 2 ஜனவரி 14 இல்




சென்னை,டிசெ.29

லிங்குசாமி இயக்கத்தில் விஷால் - கீர்த்தி சுரேஷ் - வரலட்சுமி நடிப்பில் உருவாகி வரும் சண்டக்கோழி-2 எதிர்வரும் ஜனவரி 14 இல் வெளியாகவுள்ளது.

விஷால் தற்போது பி.எஸ்.மிஸ்ரன் இயக்கத்தில் ஹிரும்புத்திரை’ படத்திலும், லிங்குசாமி இயக்கத்தில் சண்டக்கோழி-2’ படத்திலும் நடித்து வருகிறார்.

லிங்குசாமி இயக்கும் இந்தப் படத்தில் விஷால் ஜோடியாகக் கீர்த்தி சுரேஷும், வரலட்சுமி சரத்குமார் வில்லியாகவும் நடிக்கின்றனர். ராஜ்கிரண், சதீஷ், சூரி, ஹரீஷ் பேரடி, அப்பானி சரத், ஹரீஷ் சிவா உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். விஷால் தனது சொந்தத் தயாரிப்பு நிறுவனமான விஷால் பிலிம் பாக்டரி மூலம் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். (இ)

# தினகரன் ஆதரவாளர்கள் அதிமுகவில் அதிரடி நீக்கம்

சென்னை,டிசெ.29

தினகரன் ஆதரவாளர்கள்46பேர் அதிமுகவில் இருந்து நேற்று வியாழக்கிழமை அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி பழனிச்சாமி, ஒருங்கிணைப்பாளரும், துணை முதல் அமைச்சருமான ஓ.பன்னீர்ச் செல்வம் ஆகியோர் கூட்டாக இணைந்து “அ.தி.மு.க. கொள்கை - குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும், கழகத்தின் கண்ணியத்துக்கு மாசு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாலும், கழகக் கட்டுப்பாட்டை மீறிக் கழகத்துக்குக் களங்கமும், அவப்பெயரும் உண்டாக்கும் விதத்தில் செயற்பட்ட காரணத்தினாலும் அ.தி.மு.க.வில் இருந்து அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் 46 பேர் நீக்கி வைக்கப்படுகிறார்கள்” என அறிக்கை வெளியிட்டனர். (இ)





# வெற்றி மேல் வெற்றி

கொழும்பு, டிசெ.29

தேசிய இளைஞர் படையணியின் இளைஞர் யுவதிகளின் விளையாட்டு ஆற்றலைப் பரீட்சிப்பதற்காக முதலாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மாபெரும் விளையாட்டு போட்டியில் ஆகக்கூடிய வெற்றிகளை வடமாகாண அணியினர் பெற்றனர்.

தேசியக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்த விளையாட்டுப் போட்டி சமீபத்தில் திவலப்பிட்டிய தேசிய இளைஞர் படையணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கிரிக்கெட் ,வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கபடி, உதைபந்தாட்டம் ,எல்லே உள்ளிட்ட 6 போட்டிகளைக் கொண்டதாகக் குறித்த போட்டி அமைந்தது. இதன் போது வடமாகாண அணியில் ஆண்கள் பிரிவு கிரிக்கெட், உதைப்பந்தாட்டத்திலும் பெண்கள் பிரிவு கரப்பந்தாட்டத்திலும் வெற்றிகளைப் பெற்றன. இதன்போது வடமாகணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய குழுவினரே தேசிய மட்டத்தில் அதிக வெற்றிகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.(அ)




# இலங்கை அணிக்கு மெண்டிஸ் தலைவர்

கொழும்பு, டிசெ.29

19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவராக கமிண்டு மெண்டிஸ் செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரானது 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ளது.இடது கைச் சுழற்பந்து வீச்சாளரான மெண்டிஸ், திறமையான துடுப்பாட்ட வீரரும் ஆவார். கடந்த 2016 இல் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலக கிண்ண தொடரிலும் விளையாடியுள்ள மெண்டிஸ் அதில் 156 ஓட்டங்கள் எடுத்ததோடு ஐந்து விக்கெட்களும் வீழ்த்தியிருந்தார். ஜனவரியில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி 'டி' பிரிவில் பாகிஸ்தான், அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளோடு இடம்பெற்றுள்ளது.

19 வயதுக்குட்பட்ட இலங்கை அணி வீரர்கள் விவரம் வருமாறு-

கமிண்டு மெண்டிஸ் (தலைவர்) தனஞ்செய லக்சன், சன்துஸ் குணதிலக, ஹசித பொயகோட, நவனிடு பெர்னாண்டோ, நிபுன் தனஞ்செய, அஷன் பந்தரா, கிஷன் சஞ்சுலா, நிஷன் மதுஷ்க, ஜிஹன் டேனியல், பிரவீன் ஜெயவிக்ரம, திஷாரு ராஷ்மிக, கலான பெரேரா, நிபுன் மலிங்க, ஹரேன் புடிலா. (அ)

# பகல்–இரவு இனியில்லை

லண்டன், டிசெ.29

இங்கிலாந்தில், 2019ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஆஷஸ் தொடரின்போது பகல் - இரவு டெஸ்ட் இருக்காது என்றவாறான கருத்துகளை இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்றதிகாரி டொம் ஹரிஸன் வெளிப்படுத்தியுள்ளார்.

பகல் -இரவு டெஸ்ட் போட்டிகளைப் பார்வையிடுவதற்கு மைதானத்துக்கு அதிகளவிலான இரசிகர்கள் செல்வதுடன், தொலைக்காட்சியிலும் குறித்த நேரத்தில் அதிகளவான பார்வையாளர்கள் பார்வையிடுகின்ற நிலையிலேயே டொம் ஹரிஸனின் மேற்குறித்த கருத்து வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி ,அடிலெய்ட்டில் பகல் - இரவு ஆட்டமாக இம்முறை நடைபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. ஆஷஸின் டெஸ்ட் போட்டியொன்று பகல் - இரவு டெஸ்ட் போட்டியாக நடைபெற்ற முதலாவது சந்தர்ப்பமாகவும் இது அமைந்திருந்தது. (அ)






# குக் இரட்டைச் சதம் இங்கிலாந்து எழுச்சி

மெல்பேர்ன், டிசெ. 29

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில், மெல்பேர்னில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த நான்காவது டெஸ்டின் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட முடிவில், இங்கிலாந்து அணி, 9 விக்கெட்டுகளை இழந்து 491 ஓட்டங்களைக் குவித்து இப்போட்டியில் முழுமையாக ஆதிக்கம் செலுத்துகிறது.

தற்போது களத்தில், அலிஸ்டயர் குக் 244 ஓட்டங்களுடனும், ஜேம்ஸ் அன்டர்சன் ஓட்டமெதனையும் பெறாமலும் களத்தில் உள்ளனர். முன்னதாக, ஜோ றூட் 61, ஸ்டுவர்ட் ப்ரோட் 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில், நதன் லயன், ஜொஷ் ஹேஸில்வூட், பற் கமின்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலிய அணி, தனது முதலாவது இன்னிங்ஸில் 327 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்திருந்தது. துடுப்பாட்டத்தில், டேவிட் வோர்னர் 103, அணித் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் 76, ஷோர்ன் மார்ஷ் 61, கமரோன் பன்குரோப்ட் 26, டிம் பெய்ன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஸ்டுவர்ட் ப்ரோட் 4, ஜேம்ஸ் அன்டர்சன் 3, கிறிஸ் வோக்ஸ் 2, டொம் குரான் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்த நிலையில் முன்னிலை இங்கிலாந்து பெற்றுள்ளதால், நான்காவது போட்டியை வென்று, வெள்ளையடிப்பில் இருந்து அது தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. (அ)



# பாண்டியாவுக்கும் கல்யாணம்

மும்பை, டிசெ.29

கிரிக்கெட் வீரர் ஹர்திக் பாண்டியாவின் சகோதரரும் மும்பை இந்தியன்ஸ் அணி வீரருமான குணால் பாண்டியாவின் திருமணம் மும்பையில் நேற்று முன் தினம் நடந்தது.குணால் பாண்டியாவும், பன்குரி ஷர்மாவும் நீண்ட நாட்களாகக் காதலித்து வந்த நிலையில், இருவரது வீட்டிலும் பச்சைக்கொடி காட்டியுள்ளனர். இதனைத் தொடர்ந்து கோலாகலமாக நேற்று முன் தினம் இருவருக்கும் மும்பையில் திருமணம் நடந்தது.திருமண வைபவத்தில் நடிகர் அமிதாப்பச்சன், தொழிலதிபர் முகேஷ் அம்பானி, நீடா அம்பானி, சச்சின் டெண்டுல்கர், இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். இந்த ஆண்டு இந்திய அணி வீரர்களான புவனேஷ் குமார், ஸகீர்கான், விராட் கோஹ்லி ஆகியோர் திருமணம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹத்துருசிங்க ஆட்டத்தை ஆரம்பித்தார்!

கொழும்பு, டிசெ.29

இலங்கை அணியின் பயிற்சியாளராக முன்னாள் வீரர் சண்டிகா ஹத்துருசிங்க பொறுப்பேற்ற பிறகு நேற்று முன்தினம் தனது பயிற்றுவிப்பைத் தொடங்கியுள்ளார்.

கடந்த வாரம் இலங்கையின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் வீரர் சண்டிகா ஹத்துருசிங்க நியமிக்கப்பட்டார். 49 வயதான இவர், இலங்கை அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் தொடக்க ஆட்டக்காரராக விளையாடியுள்ளார். கடந்த வாரம் இலங்கை அணியின் சில வீரர்களுக்கு பயிற்சி கொடுத்த சண்டிகா, நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாகத் தனது பயிற்றுவிப்பைத் தொடங்கியுள்ளார்.

அடுத்த மாதம் பங்களாதேஷில் நடைபெற உள்ள முத்தரப்பு ஒருநாள் போட்டி தொடருக்காக, 23 முதல் நிலை வீரர்கள் இலங்கை அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த முத்தரப்பு தொடரை அடுத்து பங்களாதேஷுக்கு எதிராக டெஸ்ட் மற்றும் 'ரி-20' தொடர்களில் இலங்கை விளையாட உள்ளது. இதற்கான அணி வீரர்கள் பட்டியலில், மதுஷங்கா எனும் இளம் வீரரை சண்டிகா ஹத்துருசிங்க பரிந்துரை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 29.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.